# ஆகஸ்ட்– 04 – சனி

## புனித வியான்னி ஜோன்

**கடவுளே! என் மதிகேடு உமக்குத் தெரியும்: என் குற்றங்கள் உமக்கு மறைவானவை அல்ல. திபா. 69:5**

### முதல் வாசகம் : ஏரேமியா 26: 11 – 16,24

குருக்களும் இறைவாக்கினரும் தலைவர்களையும் மக்கள் அனைவரையும் நோக்கி, "இந்த ஆள் கொலைத் தீர்ப்புக்கு உரியவன் ஏனெனில் நீங்களே உங்கள் காதால் கேட்டதுபோல, இந்நகருக்கு எதிராக இவன் இறைவாக்கு உரைத்துள்ளான்" என்று முறையிட்டனர்.அப்பொழுது தலைவர்கள் மற்றும் மக்கள் அனைவரிடமும் எரேமியா கூறியது "நீங்கள் கேட்ட இச்சொற்களை எல்லாம் இக்கோவிலுக்கும் இந்நகருக்கும் எதிராக அறிவிக்குமாறு ஆண்டவரே என்னை அனுப்பியுள்ளார்.எனவே, இப்பொழுதே உங்கள் வழிகளையும் செயல்களையும் சீர்படுத்திக் கொள்ளுங்கள் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடுங்கள். அப்பொழுது உங்களுக்கு அறிவித்திருந்த தண்டனைபற்றி ஆண்டவர் தம் மனத்தை மாற்றிக் கொள்வார். இதோ, நான் உங்கள் கையில் இருக்கிறேன். நல்லது எனவும் நேரியது எனவும் நீங்கள் கருதுவதை எனக்குச் செய்யுங்கள். ஆனால் ஒன்றை மட்டும் நன்கு அறிந்துகொள்ளுங்கள் என்னை நீங்கள் கொல்வீர்களாகில், மாசற்ற இரத்தப்பழி உங்கள் மேலும், இந்நகர் மேலும், அதில் குடியிருப்போர் மேலும் உறுதியாக வந்து விழும். ஏனெனில் இச்சொற்கள் எல்லாம் உங்கள் செவிகளில் விழுமாறு உரைக்க ஆண்டவர் உங்களிடம் என்னை உண்மையாகவே அனுப்பியுள்ளார்."பின்னர் தலைவர்களும் மக்கள் எல்லாரும் குருக்களையும் இறைவாக்கினரையும் நோக்கி, "கொலைத் தீர்ப்பு இந்த ஆளுக்கு வேண்டாம் ஏனெனில் நம் கடவுளான ஆண்டவரின் பெயராலேயே இவன் நம்மிடம் பேசியுள்ளான்" என்றார்கள். ஆனால்,மக்கள்கையில் எரேமியா அகப்பட்டுக் கொல்லப்படாதவாறு, சாப்பானின் மகன் அகிக்காம் அவருக்கு உறுதுணையாய் இருந்தார்.

**பதில்பாடல் :** எனது விண்ணப்பத்திற்குக் கடவுளே பதில் மொழி தாரும்.

### நற்செய்தி : மத்தேயு 14 : 1 – 12

அக்காலத்தில் குறுநில மன்னன் ஏரோது, இயேசுவைப்பற்றிய செய்தியைக் கேள்வியுற்றான்.அவன் தன் ஊழியரிடம், "இவர் திருமுழுக்கு யோவான்தான். இறந்த யோவானைக் கடவுள் உயிர்பெற்றெழச்செய்தார். இதனால்தான் இந்த வல்ல செயல்களை இவர் செய்கிறார்" என்று கூறினான்.ஏரோது தன் சகோதரனான பிலிப்பின் மனைவியாகிய ஏரோதியாவின் பொருட்டு யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான்.ஏனெனில் யோவான் அவனிடம், "நீர் அவளை வைத்திருப்பது முறையல்ல" என்று சொல்லிவந்தார். ஏரோது அவரைக் கொலைசெய்ய விரும்பினான் ஆயினும் மக்கள் கூட்டத்தினர் அவரை ஓர் இறைவாக்கினர் எனக் கருதியதால் அவர்களுக்கு அஞ்சினான்.ஏரோதின் பிறந்த நாளில் ஏரோதியாளின் மகள் அவையினர் நடுவில் நடனம் ஆடி ஏரோதை அகமகிழச் செய்தாள். அதனால் அவள் எதைக்கேட்டாலும் அளிப்பதாக அவன் ஒரு வாக்குறுதியை ஆணையிட்டு அறிவித்தான்.அவள் தன் தாய் சொல்லிக்கொடுத்தபடியே, "திருமுழுக்கு யோவானின் தலையை ஒருதட்டில் வைத்து இங்கேயே எனக்குக்கொடும்" என்று கேட்டாள். இதைக்கேட்ட அரசன் வருந்தினான் ஆனாலும் தான் விருந்தினர் முன் ஆணையிட்டதால் அதை அவளுக்குக் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆள் அனுப்பிச் சிறையில் இருந்த யோவானின் தலையை வெட்டச்செய்தான். அவருடைய தலையை ஒருதட்டில் வைத்துக் கொண்டுவரச்செய்து அதைச் சிறுமியிடம் கொடுத்தான். அவளும் அதைத் தன்தாயிடம் கொண்டுசென்றாள்.யோவானுடைய சீடர் வந்து அவருடைய உடலை எடுத்துச்சென்று அடக்கம் செய்தனர் பின்னர் இந்நிகழ்ச்சியினை இயேசுவிடம் போய் அறிவித்தனர்.

**தியானம்:** இன்றைய இறைதியான வாசகங்கள் எமது வாழ்வானதாகவும், உறுதியானதாகவும் இருக்கவேண்டுமென்று இறைவன் விரும்புகிறார். ஆனால் நாங்கள் வாழும் வாழவானது தூய்மையற்றதாகவும், தீயவாழ்வாகவும் இருக்கின்றது. இருப்பினும் இறைவனிடம் மனம் வருந்தி மன்னிப்பு வேண்டும் பொழுது மன்னித்து எமக்கு புதுவாழ்வு பெற்றுத்தருவார். ஆனால் மீண்டும் மீண்டும் பாவத்தில் நாங்கள் வீழ்ந்தோமேயானால் தண்டனைத் தீர்ப்பு நிற்சயம். அன்று இறைவனுக்கெதிரான காரியங்கள் செய்ததின் நிமித்தம் இறைவன் அவர்களுக்கு பல தண்டனைகளைக் கொடுத்தார்.( எசேக்.26:1) இருப்பினும் இறைவன் மன்னிக்கிறவர், மனதிரங்குகிறவர் கொலைகாரரான மோயீசனையே இஸ்ராயேலுக்கு தலைவராக நியமித்தார். விபச்சாரத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணிற்கு பாவங்களை மன்னித்து புதுவாழ்வு கொடுத்தார். ஏரோது தனது சகோதரனின் மனைவியை தனதாக்கிக் கொண்டு தகாத உறவுகொண்டு பாவவாழ்வு வாழ்ந்தான். அவ்வாறன நிகழ்வுகள் யாவற்றையும் நாங்கள் வேதத்தில் பார்கின்றோம். இன்று எங்கள் மத்தியில் கூட பலாத்காரங்கள், பாலியல் கொடுமைகள், கொலைகள். கலப்புத் திருமணம் இவ்வாறாக தீயநிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. இவ்வாறான தீச்செயல்கள், பாவவாழ்க்கைள் யாவற்றிற்கும் மனம் வருந்தி மன்னிப்பு வேண்டினால் எமக்கு விடுதலை நிற்சயம் மாறாக தொடர்தும் பாவத்திற்குஅடிமைப்பட்டு வாழ்ந்தோமேயானால் அழிவது திண்ணம் எனவே எமது பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு பெற்று புதுவாழ்வு வாழ எங்களைத் தயார்படுத்துவோம்.